# நவநாவுகள் தேவைதானா?

வாசிக்க: அப்போஸ்தலர் 2:1-11

***"நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்" (1 கொரி 14:5)***

நவநாவுகள் ஒன்றுதான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு ஒரே அடையாளம் என்று வேதத்தில் உபதேசமாக நேரடிப் போதனை இல்லை. ஆனால் ஆவியின் நிறைவை மக்கள் பெற்றபோது அன்னிய பாஷையில் பேசியதற்குப் போதுமான எடுத்துக்காட்டுகள் திருமறையில் உண்டு.

பெந்தெகொஸ்தேயன்று ஆவியைப் பெற்ற 120 சீடரில் அத்தனை பேரும் வெவ்வேறு மொழிகளில் பேசத் தொடங்கினார்கள் (அப் 2:4). பரிசுத்த ஆவியானவர் கொர்நேலியுவின்மீதும் அவன் இல்லத்தார்மீதும் இறங்கியபோது அவர்கள் "நவநாவுகளில் பேசிக் கடவுளைப் புகழ்ந்ததை" பேதுருவோடு வந்திருந்த யூத விசுவாசிகள் கேட்டனர் (அப் 10:45). எபேசுவிலிருந்த சீடர்மீது பவுல் கைகளை வைத்தபோது அவர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் வந்தார்; அவர்கள் அன்னியபாஷையில் பேசித் தீர்க்கதரிசனம் சொன்னார்கள் (அப் 19:6). பவுல் ஆவியின் அபிஷேகம் பெற்றபோது அன்னிய பாஷையில் பேசியதாகக் குறிப்பிடப்படாவிட்டாலும், பின்னர் கொரிந்தியருக்கு எழுதுகையில், "உங்களெல்லாரிலும் நான் அதிகமாய் நவமொழிகளைப் பேசுகிறேன்; இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்" எனக் குறிப்பிட்டான் (1 கொரி 14:18; அப் 9:17,18). சமாரிய விசுவாசிகள் ஆவியைப் பெற்றபோது சீமோன் போன்றதொரு மாயவித்தைக்காரன் "காணக்கூடிய" அடையாளம் ஒன்றிருந்தது (அப் 8:17,18). இந்த எடுத்துக்காட்டுகளின் அடிப்படையில், ஆவியின் அபிஷேகத்தை ஒருவர் பெறுகையில் நவநாவுகளில் பேசுவதைப் பொதுவாக எதிர்பார்க்கலாம். ஆனால் இதற்கு நேரடியான "உபதேசம்" என்று ஒன்று இல்லாததால், அன்னியபாஷையில் பேசாத எவரும், அதில் பேசும்வரை, அபிஷேகம் பெறவில்லை என்று சொல்லமுடியாது.

ஆயினும் அன்னிய பாஷை பேசுதலில் தியான வாழ்வுக்கான ஆசீர்வாதம் மிகுதியாயிருப்பதால் ஒவ்வொரு விசுவாசியும் ஆண்டவரிடம் இக்கிருபையை நாட ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆவியின் ஒன்பது வரங்களில் பிரதானமாக ஜெபத்திலும் துதியிலும் தேவனை நோக்கிச் செயல்படுவது அன்னிய பாஷைதானே (1 கொரி 12:7-10; 14:13-17). மட்டுமல்ல, இதனால் பேசுகிறவனுக்கும் பக்திவிருத்தி உண்டாகிறது (1 கொரி 14:4). 1963இல் அபிஷேகம் பெற்றது முதல் தினமும் எனது தனி ஜெபத்தில் அன்னியபாஷையில் பேசுகிறேன்; இதனால் புத்துணர்வு பெற்று உள்ளான மனிதனில் பலப்படுகிறேன் (ஏசா 28:11,12; யூதா 20).

அன்பு இல்லாமல் அன்னிய பாஷை பேசமுடியும் (1 கொரி 13:1-3). ஒருவரது ஆன்மீக நிலையை அன்னிய பாஷையை வைத்துக் கணித்துவிடமுடியாது. மரத்தை அதின் "கனியினாலேயே" அறியலாம் (மத் 12:33). கனிகளும் வரங்களும் சமநிலைப் படுத்தப்படவேண்டும். அபிஷேகத்தின் ஓர் அடையாளமாகிய அந்நிய பாஷையானது ஆவியின் கனியாகிய அன்பினால் மக்களைச் சேர்க்கவேண்டுமே தவிர அவர்களைப் பிரிக்கக்கூடாது.

*எத்தனை நாவால் பாடுவேன் என் மீட்பர் துதியை!*
*என் ஆண்டவர் என் ராஜனின் மேன்மை மகிமையை!*
*என் ஆண்டவா, என் தெய்வமே, பூலோகம் எங்கணும்*
*பிரஸ்தாபிக்க உம் நாமமே பேர் அருள் ஈந்திடும்!* (பாமாலை)

*— சார்ல்ஸ் வெஸ்லி, 1707-1788*